தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 110 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | ஜனவரி 28, 2021

தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news

தூக்கில் தொங்கிய நிலையில் 19 வயது யுவதி சடலமாக மீட்பு

தென்மராட்சி வரணியில் சம்பவம்

தென்மராட்சி வரணி பகுதியில் 19 வயதான யுவதி யொருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

நாவற்காட்டு பகுதியில் நேற்று (27) மாலை இந்த சம்பவம் நடந்தது.

தனது தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டு நேற்று இரவு 7.30 மணியளவில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தார்.

03

தைப்பூச தினத்தில் தலைவாசல் இணையதள அங்குரார்ப்பணம்

தலைவாசல் பத்திரிகையின் இணையதள www.thalaivaasal.news அங்குரார்ப்பண நிகழ்வு தைப்பூச தினமான இன்று (28.01.2021) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இனிவரும் காலங்களில் வைபர் வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் ஊடாக தலைவாசல் பத்திரிகையை பெற்றுக் கொள்வ தோடு பிரசுர நேரத்தின் பின் www.thalaivaasal.news இணையதளத்திலும் தலைவாசல் பத்திரிகையை பார்வையிட முடியும்

சிறீலங்கா படை அதிகாரிகள் மீது பயணத்தடை

மனித உரிமைகள் ஆணையாளர் வேண்டுகோள்

சிறீலங்காவில் இடம்பெற்ற போரில் பெருமளவான மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட படை அதிகாரிகள் மீது பயணத்தடைகளை கொண்டுவருவது தொடர்பில் நாடுகள் சிந்திக்க வேண்டும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்

03

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்

பெப்.3 இல் ஆரம்பமாகி 4 நாள்கள்

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் விசுவரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று திரளுமாறு வடகிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

03

காத்திரமான தீர்மானத்தை பிரித்தானியா முன்வைக்க வேண்டும்

- மன்னிப்புச் சபை

எதிர்வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் பிரித்தானியா ஒரு காத்திரமான தீர்மானத்தை முன்வைக்க வேண்டும்,

03

காரைதீவில் மேலும் 5 மாணவர்களுக்கு கொரோனா

கல்முனை சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள காரைதீவில் மேலும் ஐந்து மாணவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது.

03

முல்லைத்தீவில் பாரயளவில் பீரங்கிக் குண்டுகள் மீட்பு

03

பெப். 4இல் கிளிநொச்சியில் கறுப்பட்டிப் போராட்டம்

நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு கறுப்பு பட்டி அணிந்து மாபெரும் அடையாள உணவு ஒறுப்பு போராட்டம் ஒன்றை வரும் 2ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பித்து 6ஆம் திகதி வரை நடத்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் திட்டமிட்டுள்ளது.

சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடக்கும் மாபெரும் நீதிப் போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அந்தச் சங்கத்தின் தலைவி யோ.கனக ரஞ்சினி அழைப்புவிடுத்துள்ளார்.

வரும் 2ஆம் திகதியில் இருந்து 6ஆம் திகதி வரை வடக்கு - கிழக்கில் அனைத்து

நெல்லியடி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு; மற்றொருவர் படுகாயம்

யாழ். நெல்லியடி பகுதியில் வேகக்கட்டுப்பாட்டையிழந்த கப் வாகனம் விபத்துக்குள்ளான தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றொருவர் படுகாயம டைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

இந்தச் சம்பவம் நெல்லியடி நகர் மக்கள் வங்கிக்கு முன்பாக இன்றைய தினம் வியாழக் கிழமை அதிகாலை 12.30 மணி யளவில் இடம்பெற்றுள்ளது

சம்பவத்தில் கரெவெட்டி வதிரியைச் சேர்ந்த பேர்னாட் கரன் (வயது-41) என்பவரே உயிரிழந்தார். படுகாயமடைந்த மற்றையவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் நெல் லியடி பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்ற னர்.

சுதந்திர தினத்தில் மாபெரும் போராட்டத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

சுதந்திர தினத்தில் மாபெரும் போராட்டத்திற்கு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகளின் சங்கம் இன்று (வியாழக்கிழமை) அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி கறுப்பு பட்டி அணிந்து மாபெரும் அடையாள உணவு ஒறுப்பு போராட்டத்தை ஆரம் பித்து எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி வரை முன்னெடுக்க வுள்ளதாகவும் குறிப்பிட்டுள் ளது.

யாழ்.ஊடக அமையத்தில் இன்று (வியாழக்கிழமை) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க தலைவி யோகராஜா கனக ரஞ்சினி இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

அத்தோடு சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இடம்பெறும் மாபெரும் நீதிப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் அழைப்பு விடுத்துள் ளது.

5 இலட்சம் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்தன!

இந்தியாவினால் நன்கொடையாக வழங்கப் படும் 5 இலட்சம் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி சற்று முன்னர் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

குறித்த தடுப்பூசிகள் அடங்கிய எயார் இந்தியா விமானம் சற்றுமுன்னர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியாவால் தயா ரிக்கப்படும் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகாவின் கோவிஷீல்ட் தடுப்பூசி அவசரகால பயன் பாட்டிற்காக இலங்கை அரசாங்கத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி திட்டம் நாளை முதல் கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள ஆறு வைத்தியசாலையில் தொடங்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் இந்த வைத்தியசாலைகளில் சுமார் 25 சதவீத ஊழியர்களுக்கு திட்டத்தின் தொடக் கத்தில் தடுப்பூசி போடப்படும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை ஜனாதிபதி பொறுப்பேற்றார்

இந்தியாவினால் நன் கொடையாக வழங்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொறுப்பேற்றுள்ளார்.

இந்தியாவினால் அன்ப ளிப்பு செய்யப்பட்ட ஒக்ஸ் போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகளுடனான விமானம் சற்றுமுன்னர் கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

5 இலட்சம் தடுப்பூசிகள் இதன்போது கொண்டுவரப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. 42 பெட்டிகளில் அடைக்கப்பட்ட நிலையில் குறித்த தடுப்பூசிகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இந்தியாவிடமிருந்து மேலும் 30 இலட்சம் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய திட்டம்!

இந்தியாவிடமிருந்து மேலும் 30 இலட்சம் தடுப்பூசி மருந்தை கொள்வனவு செய்ய திட்டமிட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களத் தின் உத்தியோகப்பூர்வ இணைய தளத்தில் செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

இந்தியாவினால் நன்கொடை யாக வழங்கப்படும் 5 இலட்சம் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெ னெகா தடுப்பூசிகள் இன்று (வியாழக்கிழமை) காலை நாட் டுக்கு கொண்டு வரப்பட்டன.

சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியாவால் தயாரிக்கப்படும் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெ காவின் கோவிஷீல்ட் தடுப்பூசி அவசரகால பயன்பாட்டிற்காக இலங்கை அரசாங்கத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி திட்டம் நாளை முதல் கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள ஆறு வைத்திய சாலையில் தொடங்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் இந்த வைத்தியசாலை களில் சுமார் 25 சதவீத ஊழி யர்களுக்கு திட்டத்தின் தொடக் கத்தில் தடுப்பூசி போடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீடற்ற ஏழைக் குடும்பத்துக்கு வீடு; மகனின் பிறந்தநாளில் பெற்றோர் செய்த நற்காரியம்

வீடற்ற வறிய ஏழை குடும்பம் ஒன்றிற்கு பல இலட்சம் பெறுமதியான வீடு ஒன்றினை கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் அணுசரனையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வெளிநாட்டில் உள்ள சுவிசில் வசிக்கும் விஜியகுமாரன்(விஜி) தம்பதியினர் தமது பிள்ளைகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு இளைஞர் சேனையின் மனித நேயப்பணிகளில் ஒன்றாகிய இல்லம் அமைத்து கொடுத்தல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் ஊடாக இவ்வீடமைப்பிற்காக நிதியுதவிகளை வழங்கியுள்ளனர்.

மேலும் குறித்த வீடு அமைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கொரோனா சுகாதார நடைமுறைக்கமைய இன்று(28) மதியம் கல்முனை பாண்டிருப்பு பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டார்.

இதன் போது அங்கு கருத்து தெரிவித்த அவர்

மனிதனின் அடிப்படை பிரச்சினை களான வீடு உடை உணவு என்பன உள்ளன. அத்தடன் தற்போது கல்வியும் அத்தியா வசியமாக நாம் நோக்க வேண்டும். நிலையான அபிவிருத்தியை நோக்கி சமூகம் நகர்வதற்கு காலத்தின் தேவையாக கல்வி உள்ளதை நாம் அறிந்து அதற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். மேலும் பல்வேறு விமர்சனங்களுக்கு அப்பால் எம்மை நாம் சவாலுக்கு உட்படுத்தி எமது பகுதி வாழ் மக்களின் அபிவிருத்தியில் கை கொடுக்க அர்ப்பணிப்புகளை மேற் கொள்வோம் என்றார்.

இந்நிகழ்வில் தேற்றாத்தீவு பங்குத்தந்தை நிர்மல் சூசை ராஜ் ,கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் தலைவர் ந.சங்கீத் அதன் அங்கத்தவர்கள் உட்பட பரோபகாரரின் உறவினர் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.இறுதியாக புதிய வீட்டின் முன்னால் மாமரம் ஒன்றினை மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் கல்முனை பிராந்திய இளைஞர் சேனை தலைவர் ஆகியோர் இணைந்து நட்டு வைத்தனர்.

மேலும் கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையானது அண்மைக் காலமாக வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கொரோனா அனர்த்தங் களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

பொத்துவில்...

இதுதொடர்பில் அவை கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

வடகிழக்கு பூர்வீக குடிகளான நாம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எங்களது தன்னாட்சி உரிமைகளுக்காக போராடி வருகின்றோம்.

ஆனால் தமிழர்களின் போராட்டங்களுக்கு செவிசாய்க்காத இலங்கை அரசு தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை யாவரும் அறிவோம்.

போர் நிறைவடைந்து கடந்த பத்து ஆண்டுகளில் வடகிழக்கை இராணுவ மயமாக்கிவரும் இலங்கை அரசு, தமிழ் மக்களின் கலாசார - பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன் வடகிழக்கு பூர்வீக குடிகளான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதற்காக பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் , வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பௌத்த மயமாக்கல் திட்டங்களை இலங்கை அரசு முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதன்மூலம் வடக்கில் குருந்தூர் மலை ஐயனார் கோயில், வெடுக்குநாறி மலை சிவன் கோயில், நிலாவரை, கிழக்கில் கண்ணியா பிள்ளையார் கோயில், குசனார் முருகன் ஆலயம், வேற்றுச்சேனை சித்திவிநாயகர் ஆலயம் உள்பட்ட பல ஆலயங்களில் தமது பாரம்பரிய, கலாசார, சமய, வழிபாடுகளை செய்ய முடியாதவாறு ஆலயங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதோடு அங்கு பௌத்த ஆலயங்களை நிறுவுவதற்கும் முயற்சிகள் நடைபெறுகிறது.

மேலும் வடகிழக்கில் உள்ள சுமார் 200இற்கும் மேற்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களை கையகப் படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறது.

அத்துடன் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்களை தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றனர். இது அவர்களின் பேச்சுரிமை, அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

அத்தோடு தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சிங்கள குடியேற்றங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள மயிலத்த மடு, மாதவனை மேய்ச்சல் தரை காணிகளை அபகரித்து சிங்கள குடியேற்றம் ஒன்றை உருவாக்க முயற்சிகள் நடைபெற்று வருகிறது.

மட்டக்களப்பில் உள்ள பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் பால் தரும் பசுக்களை திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யும் நடவடிக்கைகளும் நடந்தேறி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக காடுகள் அழிக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இஸ்லாமிய மக்களின் மத ரீதியான பாரம்பரிய சமய சடங்கான ஜனாசாக்களை புதைக்கும் செயற்பாடுகளை இல்லாமல் செய்து ஜனாசாகளை எரியூட்டி வருகின்றனர். இதற்கு எதிராக போராடும் முஸ்லீம் சமூகத்தையும் அடக்கி ஆள முனைகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் பின்ன பலதரப்பட்ட இஸ்லாமிய மக்களை பயங்கரவாத தடைச் சட்டத்தினை பயன்படுத்தி தடுத்து வைத்துள்ளனர்.

இதே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலரையும் கைது செய்து பல வருடங்களாக தடுத்து வைத்துள்ளனர்.

இதேபோன்று சிறைகளில் விசாரணைகள் இன்றி தமிழ் அரசியல் கைதிகளாக பலர் உள்ளனர். ஆனால் பல குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ள அரசு இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்ய தொடர்ந்தும் மறுப்பு தெரிவித்து வருகிறது.

வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தங்களது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி வருடக்கணக்கில் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். ஆனால் அவர்களுக்கான நீதியை வழங்காது அரசு ஏமாற்றி வருகிறது.

அத்துடன் மலையக தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்திற்காக 1,000 ரூபாய் சம்பள உயர்வு கேட்டு போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாது அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

இவ்வாறு தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள் உள்பட இலங்கை முழுவதும் திட்டமிட்டு நடாத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு வடகிழக்கு தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், பல்சமய ஒன்றியங்கள் இணைந்து அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகளை நடைமுறை படுத்த கோரியும் வடகிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை எதிர்வரும் 3 ம் திகதி முதல் 6ம் திகதி வரை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

உரிமைகளை இழந்து நீதி மறுக்கப்பட்ட சமூகமாக வாழும் தமிழ் பேசும் மக்களாகிய எமது அவலக் குரல்கள் சர்வதேசத்தின் மனசாட்சிகளை தட்டும் அளவுக்கு எமது போராட்டத்தை அகிம்சை வழியில் முன்னெடுக்க வேண்டி உள்ளதால் அனைத்து தமிழ் பேசும் மக்களையும் இப்போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேசம் நீதியை பெற்று தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து சர்வதேச மனித உரிமைகள் பேரவைக்கு வடகிழக்கு தமிழ் அமைப்புகள் ஓரணியில் இணைந்து கையொப்பம் இட்டு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கை நிறைவேற்ற கோரியும் அந்த கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் எதிர்வரும் 03.02.2021 தொடக்கம் 06.02.2021 வரை மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளமையால் மேற்படி போராட்டத்திற்கு வடகிழக்கில் உள்ள சிவில் அமைப்புக்கள், பல்சமய ஒன்றியங்கள், அரசியல் கட்சிகள் என அனைவரது ஆதரவையும் கோரி நிற்கின்றோம்.

மேற்படி போராட்டத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வடகிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் தங்களது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

எனவே அரசியல் கட்சிகள் உள்பட வடகிழக்கில் உள்ள அனைவரும் மேற்படி போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி கலந்து கொள்ளுமாறு வடகிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது.

வடகிழக்கு சிவில் சமூக அமைப்புகள்.

வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம்.
அரசு சாரா தொண்டு நிறுவணங்களின் இணையம் கிளிநொச்சி.
கிழக்குப்பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம்.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்.
அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு.
சிவகுரு ஆதீனம் யாழ்ப்பாணம்.
தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மட்டக்களப்பு.
மறுமலர்ச்சி பெண்கள் அமைப்பு மட்டக்களப்பு.
மட்டக்களப்பு மாவட்ட பல் சமயங்களின் ஒன்றியம்.
மட்டக்களப்பு மாவட்ட முதியோர் அமைப்புக்களின் சம்மேளனம்.
தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு மட்டக்களப்பு.
வெண்மயில் அமைப்பு மட்டக்களப்பு.
The American ceylon mission batticaloa.
தாய் நிலம் அறக்கட்டளை யாழ்ப்பாணம்.
குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயம் முல்லைத்தீவு.
வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ் வரர் ஆலயம் வவுனியா வடக்கு.
சமூகமட்ட அமைப்புக்களின் சம்மேளணம் கிளிநொச்சி
ஸ்ரீ சித்தி வினாயகர் ஆலயம், வேற்றுச்சேனை - வெல்லாவெளி மட்டக்களப்பு
தென்கைலை ஆதீணம் கண்ணியா திருகோணமலை
தமிழர் மரபுரிமை பேரவை முல்லைத்தீவு

காரைதீவில்...

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பிணிமனையின் இன்றைய (28) கள நிலைவர அறிக்கையில் இவ்விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (22) காரைதீவிலுள்ள பாடசாலையொன்றில் இரு மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, தொற்றுக்குள்ளான மாணவர்களுடன் நெருங்கிப் பழகிய 32 மாணவர்கள், கடந்த திங்கட்கிழமை (25) பிசிஆர் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

நேற்று (27) கிடைத்த இந்தப் பிசிஆர் முடிவுகளின்படி அந்த 32 பேரில் மூன்று மாணவர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

அவர்களை சிகிச்சை நிலையத்துக்கு சுகாதாரத் துறையினர் அழைத்துச் சென்றுள்ளதுடன், அம்மாணவர்களது வீட்டிலுள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஏற்கெனவே கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்ட தாதிய உத்தியோகத்தரது பிள்ளைகள் இருவருக்கும் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் காரைதீவின் இரு பிரபல பாடசாலைகளைச் சேர்ந்தவர்களாவர். இம்மாணவர்களும் சிகிச்சைக்காகக் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மாணவர்களிடையே கொரோனா தொற்றும் அதனைத்தொடர்ந்த பிசிஆர் சோதனைகள் அனைத்தும் பெற்றோரிடையேயும் மாணவரிடையையும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

இதனால் செவ்வாய்க்கிழமை (26) முதல் காரைதீவிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் மாணவரின்றி வெறிச் சோடிக் காணப்படுகின்றன. அநேகமான பாடசாலைகளில் 10 சதவீதத்துக்கும் குறைவான மாணவர்களே வருகை தருவதுடன், ஆசிரியர்களின் வருகையும் வீழ்ச்சியடைந்துள்ளதால், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

காரைதீவுப் பிரதேசத்தில் இதுவரை 69 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுள்ளதுடன், சிவப்பு எச்சரிக்கை வலயமாக பிரகடனப்படுத்தி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்திருக்கிறது.

காத்திரமான...

அதனை நடைமுறைப்படுத்துவதில் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிக அக்கறை காண்பிக்க வேண்டும் என அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பணிப்பாளர் டேவிட் கிறிபிற் மேலும்

தெரிவித்துள்ளதாவது:

போர் நிறைவடைந்து 12 வருடங்கள் கடந்த நிலையிலும் அங்கு மனித உரிமைகளின் மேம்பாடு தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது அங்குள்ள நிலமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் சிறீலங்கா அரசு 30/1 என்ற தீர்மானத்தில் இருந்து விலகியுள்ளது. அதாவது அங்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை அது தொடர்ந்து மறுத்து வருகின்றது. இந்த நிலையில் மனித உரிமைகள் ஆணைக்குழு தனது அடுத்த கட்டத்திற்கு நகரவேண்டும்.

தனது பரிந்துரைகளை நிறைவேற்றும் பொறிமுறை ஒன்றை மனித உரிமைகள் அணைக்குழு மேற்கொள்ள வேண்டும். சாட்சியங்களை சேகரித்து சிறீலங்காவின் தற்போதைய நிலையை உன்னிப்பாக அவதானித்து செயற்படும் குழுவை அமைக்க வேண்டும்.

பிரித்தானியா அரசு தனது கூட்டணி நாடுகளுடன் இணைந்து காத்திரமான தீர்மானத்தை முன்வைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில்...

முல்லைத்தீவில் பாரியளவில் பீரங்கிக் குண்டுகள் மீட்கப்பட்டள்ளன. முல்லைத் தீவு முள்ளியவளையில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, 146 பீரங்கிக் குண்டுகளும், 78 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன எனவும், எனினும் அவை பாவனைக்கு ஏற்றவை அல்ல எனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா...

குழுவின் ஆணையாளர் மிசெல் பசெலெட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளதாக த ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடுகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீதான பயணத்தடை மற்றும் அவர்களின் சொத்துக்களை முடக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 28 இற்கு மேற்பட்ட படை அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகளை சிறீலங்கா அரச தலைவர் பொதுமக்களுக்கான சேவை பணிகளில் நியமித்துள்ளார். ஆனால் அவர்களில் பலர் போர்க் குற்றவாளிகள் என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் இனங்காணப் பட்டவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தூக்கில்...

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலம், இன்று பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படவுள்ளது.

பெப். 4இல்...

மாவட்டங்களில் அடையாள உணவு ஒறுப்பு போராட்டம் நடைபெறும்.

அத்தோடு பெப்ரவரி 4ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி முன்றலில் இடம்பெறும் போராட்டத்தில் அனைவரும் கறுப்பட்டி அணிந்து பங்குகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

கலாசார சீரழிவில் ஈடுபட்ட கும்பல் மானிப்பாயில் சிக்கியது

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் இளம் பெண் ஒருவரை பொலிஸ் உத்தி யோகத்தருக்கே பணத்துக்காக ஒழுங்கு படுத்திய கும்பல் ஒன்று சிக்கியுள் ளது.

முச்சக்கர வண்டியில் நடமாடும் கலாசார சீரழிவில் ஈடுபட்டு வந்த பெண்கள் இருவர் உள்பட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் 45 வயதுடைய மானிப் பாய் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், கோப்பாயைச் சேர்ந்த 20 வயதுடைய பெண்ணை வைத்து இந்தகலாசார சீரழிவை பணத்துக்காக முன்னெடுத் துள்ளார்.

அவர்களுக்கு உடந்தையாக முச்சக்கர வண்டி சாரதி ஒருவரும் நெல்லியடியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரும் செயற் பட்டுள்ளனர்.

அந்த நான்கு பேரும் நேற்று புதன் கிழமை மாலை கைது செய்யப்பட் டுள்ளனர்.

கலாசார சீரழிவு இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இரகசிய பொலிஸ் உத்தியோகத்தர்

ஒருவர் ஊடாக கும்பலுடன் தொடர்பை ஏற்படுத்திய மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி,அந்தக் கும்பலைச் சேர்ந்த நால் வரையும் கைது செய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் பெண் களை வைத்து பணம் உழைப்பதாக கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தர வில் 3 மாதங்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் நடமாடும் கலாசார சீரழிவு கும்பல் என்று மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்ததுடன் கும்பலிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித் தார்.

கொரோனாவால் 60 ஆயிரத்து 694 பேர் பாதிப்பு: 290 பேர் உயிரிழப்பு

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 772 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 60 ஆயிரத்து 694ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 52 ஆயிரத்து 566 பேர் பூரணமாகக் குணமடைந்துள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 7 ஆயிரத்து 838 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு கொரோனா தொற்று சந்தேகத் தில் 781 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் மேலும் இரு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த 43 வயதான ஆண்ணொருவர், ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



அதேநேரம், ஹொரணை - கோனபொல பகுதியைச் சேர்ந்த 74 வயதான பெண் ணொருவர், ஹொரணை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 290 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

சுதந்திரதின கொண்டாட்ட ஒத்திகை கொழும்பில் விசேட போக்குவரத்து நடைமுறை!

73 ஆவது சுதந்திர தின கொண்டாட் டத்தின் ஒத்திகை நிகழ்வு காரணமாக கொழும்பு 7 சுதந்திர சதுக்கத்தை அண் மித்த பகுதிகளில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ஜனவரி 30 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 3 ஆம் திகதி வரை குறித்த பகுதிகளில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்

குறித்த நாட்களில் காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரை கொழும்பு சுதந்திர சதுக்கம் மற்றும் சுதந்திர மாவத்தை ஆகியவற்றை

அண்மித்த பகுதிகளில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறும் நாளன்று காலை 4 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரையும் குறித்த பகுதிகளில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளதாகவும் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சுதந்திர சதுக்கத்தை அண்மித்துள்ள பகுதிகளில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள் நிலையில் பொதுமக்கள் மாற்று வீதிகளை பயன் படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள னர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதி பதியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து நடைபெறும் இரண்டாவது சுதந்திரதின நிகழ்வு இது என்பதுடன் குறித்த நிகழ்வை செழிப்பான எதிர்காலம் வளமான தாய்நாடு எனும் தொனிப்பொருளில் கொண்டாட அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தனிமைப்படுத்தப்பட்டார் !

வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க நேற்று (புதன்கிழமை) முதல் அவரின் இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இன்று காலை இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவுக்கு தொற்று உறுதியானதை அடுத்து அவருடன் நெருங்கி பழகிய நிலையில் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனை யின் பேரில் கடந்த 24 ஆம் திகதி இருவரும் வலபனையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தனர்.

இதுவரை நாடாளுமன்றில் அமைச்சர், இராஜாங்க அமைச்சர் உட்பட 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்குள் மேலதிகமாக 10 ஆயிரம் மாணவர்களை இணைக்க தீர்மானம்

பல்கலைக்கழகங்களில் மேலதிக மாக 10 ஆயிரம் மாணவர்களை இந்த ஆண்டில் இணைத்துக் கொள் ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வெளியிடப் படும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேலும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை தொடர்பான திட்டம் மீளாய்வு செய்யப்பட்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாணவர்களை உள்வாங்கும் புதியமுறைமை அறிமுகப்படுத்தப்படும் எனவும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கோப்பாயில் அங்கஜனின் அலுவலகம்

பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்புக்குழுவின் இணைத் தலை வருமான அங்கஜன் இராமநாதனின் கோப்பாய்த் தொகுதிக்கான மக்கள் தொடர்பாடல் அலுவலகம் இன் றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, நாடாளுமன்ற குழுக்க ளின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அலுவலகத்தை திறந்து வைத்துள்ளார்.

குறித்த அலுவலகம் கோப்பாய் சந்திக்கு அருகில், மானிப்பாய் வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் ஆரம்பத்தில் கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்டவர்கள் அழைத்து வரப்பட்டி ருந்தனர்.

நிகழ்விற்கு தொகுதி அமைப்பாளர் கள், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பி.சி.ஆர். பரிசோதனைகளில் பங்கேற்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு!

நாடாளுமன்றத்தில் எழுமாற்றாக முன்னெடுக்கப்படவுள்ள பி.சி.ஆர். பரி சோதனைகளில் பங்கேற்குமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடன் வாரத்துக்கு ஒரு முறை பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 13 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நாடாளுமன்றில் மேற்கொள்ளப்பட பி.சி.ஆர். பரிசோதனை களில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு அறிவித்துள்ளது.